போர் வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசி 22
சென்னை, 5—3—49

வீச்சு 27

ஜனவரி பிப்ரவரிதான் பாக்கி!

[சென்னை சர்க்கார் இனி போடக்கூடிய வரிகள் வேறு ஏதுமே இல்லை.]



ஏற்கெனவே சுமக்க முடியாத வரிப்பளுவைச் சுமந்து சுமந்து எலும்பு கொறுங் க்கிடக்கும் ஏழைவிவசாயியின் தோள்மீது மிளகு வரி, மிளகாய் வரி, உருளைக்கிழங்கு ரி, முந்திரி வரி, மணிலா வரி, கரும்பு வரி, வாழைப்பழ வரி, பருத்தி வரி, எண்ணெய் த்து வரி ஆகிய இவ்வளவு வரிகளையும் இந்த மாதம் வெளியான பட்ஜட் மூலம் மத்துகின்றனர் சென்னை சர்க்கார். ஏழை விவசாயி இவ்வளவு சுமைகளையும் தாங் க்கொண்டு வாழமுடியுமா? முடியுமா?

விஷத்தைப் பொழியும் விரியன் பாம்புகள்!

★

பேனா ஒரு மாயாவி! அதற்கு இதுதான் வடிவம் என்றோ, இவ்வளவு தான் ஆற்றல் என்றோ, இத்துணைதான் திறமை என்றோ எவரும் உறுதியிட்டுக் கூற முடியாது. ஏனெனில் அது எப்போதும் ஒரே வடிவம் உடையதாகவோ, ஒரே ஆற்றல் படைத்ததாகவோ, ஒரே வகையான திறமை நிறைந்ததாகவோ இருப்பதில்லை. அது யார் யார் கரத்திலே தங்குகிறதோ அவரவர்களுடைய மனப் பண்புக்கும் பக்குவத்திற்கும் ஏற்ப, அது புதுப் புது வடிவமும் தனித்தனி ஆற்றலும், வெவ்வேறு திறமையும் படைத்ததாய்த் தோற்றமளிக்கிறது. சிலர் கரத்திலே இருந்தால், அது, ஓர் பலமுள்ள போர்வாளாகிறது — அநீதியை, ஆணவத்தை, அக்கிரமத்தை, அதர்மத்தை வெட்டி வீழ்த்துகிறது. வேறு சிலர் கரத்தில் இருந்தாலோ அது ஒரு இரும்புக் கவசமாகிறது — அதே அநீதியை, ஆணவத்தை, அக்கிரமத்தை, அதர்மத்தை, வீரர்கள் விடும் கணைகளின் தாக்குதலால் தகர்ந்து போகாவண்ணம் சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிறது. சிலர் கரத்திலே அது ஓர் பூந்தோட்டமாக இருக்கிறது—மந்த மாருதத் தென்றலையும் மனதை மகிழ்வுறச் செய்யும் மகரந்த வாசனையையும் அள்ளி அள்ளித் தருகிறது, வேறு சிலர் கரத்தில் தங்கினாலோ, அது விஷத்தைப் பொழியும் ஒரு விரியன் பாம்பாக உருமாறுகிறது — நல்லோரையும் நல்ல மனமும் குணமும் படைத்தோரையும் அது தன் நச்சுப் பல்லாலே நாசபுரிக்கு இழுத்துச் சென்றுவிடுகிறது. சிலர் கரத்திலே அது பி. சி. ஜி. இஞ்செக்ஷனாக இருக்கிறது — சமுதாயத்திற்கு வரக்கூடிய எத்தனையோ பயங்கரமான எலும்புருக்கி நோய்களை வாராவண்ணம் தடுத்து நிறுத்துகிறது, சிலர் கரத்திலே அது அற்புதமான ஆற்றல் படைத்த அரிய புதிய 'டானிக்'காக இருக்கிறது— நலிந்து மெலிந்துபோன சமுதாயத்திற்கும் புதிய ஆற்றலையும் மன எழுச்சியையும் கிளர்ச்சியையும் ஊட்டுகிறது, ஆனால் வேறு சிலர் உண்டு அவர்கள் கரத்திலே அது இருக்கும்போது, சமுதாயத்திற்குப் புதிய புதிய நோய்களை வரவழைத்துத் தரும் பயங்கரக் கிருமியாக அது காட்சி தருகிறது. யார் யார் எங்கெந்த வடிவத்தில் தன்னை வழிபடுகிறார்களோ அவரவர்களுக்கு அந்தந்த வடிவத்தில் தோன்றி அருள்பாலிப்பான் எல்லாம்வல்ல எம் ஆண்டவன் என்று சிவநெறியாளர்கள் சிலர் சற்றுப் பெருமையோடு கூறுவதுண்டு, அது உண்மையோ அல்லவோ யாம் அறியோம், ஆனால், பேனா, யார் யார் கரத்திலே தங்குகிறதோ அவரவர்களுடைய அறிவின் கண்ணாடியாகக் காட்சி தருவது மட்டும் உண்மை. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அது முகத்தில் தெரியுமோ தெரியாதோ, எழுத்தில் தெரிவது உறுதி. உள்ளத்திலே ஒளி உண்டாயின் வாக்கினிலேயும் ஒளி இருக்கத்தானே செய்யும்? சட்டியில் இருப்பது அகப்பையில் எப்படி வராமற் போகும்! பேனா ஒரு மாயாவி ஆகவே அது ஆளுக்கும் ஆளின் குணத்திற்கும் ஏற்றபடி வெவ்வேறு வடிவம் கொள்ளும் என்பது மட்டுமல்ல, அது ஒரு நிலைக்கண்ணாடி, ஆகவே அதனை ஏந்தியிருப்பவரின் உள்ளத்தை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டும் பண்பும் அதற்குண்டு.

* * *

"பேனா"வின் உருவமும் பண்பும் பயனும் பற்றிய இப் பல்வேறு சிந்தனைகள் நம் உள்ளத்தில் அலைமோதத் தொடங்கின 24-2-49ல் வெளியான "ஹிந்து" இதழையும் 19-2-49ல் வெளியான "ஸ்வதந்த்ரா" ஏட்டையும் கண்டஞான்று!

இந்த இரண்டு பத்திரிகைகளையும் நாம் இதுவரையிலே கண்ணியமுள்ள கனவான்களின் ஏடு என்றே கருதி வந்திருக்கிறோம், ஆனால் இப்போதுதான் நமக்குத் தெரியவருகிறது இவை இரண்டும் கண்ணியமுள்ள ஏடுகளுமல்ல, இவற்றை நடத்துபவர்கள் கனவான்களுமல்ல என்பது! நமக்கு நீண்ட நாட்களாகவே தெரியும் இந்த இரண்டு ஏடுகளும் அநீதியை வெட்டி வீழ்த்தும் போர்வாட்கள் அல்ல, அதனை, நம் கணைகள் தாக்காவண்ணம் தாங்கிநிற்கும் கவசங்கள் என்பது! இவற்றின் நோக்கமும் போக்கும் பொதுமக்கள் நலனுக்கு மாறுபட்டது என்பதும், பொதுமக்கள் நலன் குறைந்தால் தான் இவற்றின் நலன் ஓங்கும் என்பது இவற்றின் உள்ளத்தில் ஆழப் புதைந்து போயிருக்கும் உறுதியான எண்ணம் என்பதும், இவை செல்லும் திசை, நடக்கும் நடை, பார்க்கும் பார்வை, நினைக்கும் நினைப்பு, காணும் கனவு, போடும் திட்டம், அத்தனையும் இந்நாட்டின் சொந்தக்காரர்களாகிய திராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை வளரவொட்டாமல் வதைப்பதாகவே இருக்கும் என்பதும், இவை எந்நாளும் மக்களின் பகைவர்களே தவிர நண்பர்கள் அல்ல என்பதும் நமக்குத் தெரியாத புதிய சேதிகள் அல்ல! இந்த ஏடுகளின் வளர்ச்சி தமிழர் சமுதாயத்தின் தளர்ச்சி என்பதையும் இந்த ஏடுகளின் தளர்ச்சி தமிழர் சமுதாயத்தின் வளர்ச்சி என்பதையும் நாம் இதுவரை உணராமலும் இல்லை. இந்தச் சாதாரண உண்மைகளை காங்கிரசில் உள்ள திராவிட எம். எல். ஏக்களே தெள்ளத் தெளிய உணர்ந்துள்ள இந்நாளில் நாம் இவற்றை உணராமல் இருப்பது என்பது எப்படி மு

...யும்? இந்த உண்மைகளை நாம் அறிவோம், மிக நன்றாக அறிவோம், ஆனால் நாம் இதுவரை எண்ணிவந்தோம், இந்த ஏடுகள் அநீதியின் பக்கமே இருந்தாலும், ஆணவத்திற்கும் அக்கிரமத்திற்கும் கொடிதூக்கும் திருப்பணியே புரிந்துவந்தாலும், பரம்பரை பரம்பரையாக சாஸ்திரங்களாலும் சம்பிரதாயங்களாலும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் பழந்தமிழ் மக்கள்மீது பகைமை உணர்ச்சியையே இந்த ஏடுகள் கொண்டிருந்தாலும், இவற்றின் உள்ளத்தின் எல்லை முழுவதிலும், இவற்றைப் பெற்றெடுத்த அந்தச் சிறு சமுதாயம் மட்டும் வாழ்ந்தால் போதும்—பிறர் எக்கேடு கெட்டால் என்ன என்ற நச்சு மனப்பான்மையே பொங்கித் ததும்பிப் பூரணமாக நிற்கிறது என்றபோதிலும், வேறு சில ஆரிய ஏடுகள் போலல்லாமல், இந்த இரண்டு ஏடுகளும், எழுதும் முறையிலே, அந்த நடையிலே, உள்ளக் கருத்தை உரைக்கும் வகையிலே கொஞ்சம் கண்ணியம் இருக்கிறது, சிறிதளவு கனவான்தன்மை இருக்கிறது, சற்று நாகரிகம் இருக்கிறது, சிறிது நற்பண்பு இருக்கிறது என்று நாம் எண்ணிவந்தோம்; எரிகிற கொள்ளிகள் எல்லாமே திராவிட சமுதாயம் தீய்ந்துபோகவேண்டும் என்ற தீய நினைப்பு உடையனதாம் என்றாலும் இந்த இரண்டு "கொள்ளி"களும் எரிகிற விதத்திலே கொஞ்சம் ஒழுங்குமுறையோடு எரிவன என்று நாம் எண்ணிவந்தோம்; ஆரிய வட்டாரத்தவர் நடத்தும் ஏடுகள் ஒவ்வொன்றும் திராவிட மக்கள்தம் இதயத்தின்மீது பாய்ச்சப்படும் ஈட்டிமுனைகள்தாம் என்றாலும் இந்த இரண்டு ஈட்டிமுனைகளும் கொஞ்சம் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்த்து, பிறர் எவரும் பாராத நேரமாகப் பார்த்து, நாமும் ஏமாந்த நேரமாகப் பார்த்து, நம்மீது "சல்லீசாகச்" செலுத்தப்படும் ஈட்டிமுனைகள் என்றெண்ணிவந்தோம், ஆனால் இப்போதுதான் நமக்குத் தெரிகிறது, நாம் எண்ணியதுபோல கண்ணியத் தன்மையோ கனவான்பண்போ இவற்றிடம் சிறிதும் இல்லை என்பது!

திராவிடர் கழகம், தென்னாட்டில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பங்கு குடிமதிப்புள்ள திராவிடப் பெருங்குடி மக்கள் எல்லோருடைய நலத்திற்காகவும் பாடுபடும் ஓர் புனிதமான இயக்கம். திராவிடர்கள் அரசியலில் அடிமைகளாகவும், ஆத்மார்த்தத்தில் நாலாவது ஐந்தாவது சாதியினராகவும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட தீண்டாத மக்களாகவும், பொருளாதாரத்தில் பரம்பரை ஏழைகளாகவும் கிடந்து சிதையும் இன்றைய இழிநிலை ஒழியவேண்டும் என்பதே திராவிடர் கழகத்தின் குறிக்கோள். சாதி பேதம் கூடாது, பிறவியின் காரணமாக மக்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்படக்கூடாது, ஒரு சாதியினர் உயர்ந்தவர்கள், பூசுரர்கள், பூதேவர்கள், ஆண்டவனின் முகத்துதித்தோர்கள் — மற்றொரு சாதியினர் தாழ்ந்தவர்கள் தாசர்கள் தஸ்யூக்கள் சூத்திரர்கள் என்று கூறப்படும் நிலை இருக்கக்கூடாது, எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்ற உயர்நிலை உருவாக வேண்டும், சமத்துவமும் சகோதரத்துவமும் எங்கும் நடமாட வேண்டும், மக்கள் அனைவரும் ஒரே சாதி என்ற சிறந்த எண்ணம் எல்லோருக்கும் ஏற்படவேண்டும், பொருளாதாரத் துறையில் இன்றுள்ள மகத்தான மேடு பள்ளங்கள் அழிக்கப்பட்டு, "இலையே உண விலையே கதியிலையே எனும் எளிமை இனிமேல் இலை எனவே முரசறைவாய் முரசறைவாய்" என்று கவிபாடக் கூடிய பொன்னாள் பூத்திடல் வேண்டும், எங்கணும் இன்பமும் மகிழ்ச்சியும் அரசோச்சவேண்டும் என்பதே நம் கழக இலட்சியம். வடநாட்டவர்கள் தென்னாட்டைச் சுரண்டிச் சூறையாடும் இன்றைய ஆட்சிமுறை தகர்த்தெறியப்பட்டு, இனி தென்னாடு வடநாட்டவராலும் வேறு எந் நாட்டவராலும் சுரண்டப்படுவதற்கு சிறிதும் இடமின்றி தென்னாட்டைச் சுற்றி வேலி எழுப்பப்பட்டு, தென்னாடு தனி அரசாக அமையவேண்டும் என்பதே திராவிடர் கழகத்தின் அரசியல் இலட்சியம். பல்வேறுபட்ட இந்த இலட்சியங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகவே திராவிடர் கழகம் அரும் பாடுபட்டு வருகிறது. இது தவிர, கழகத்திற்கு, எந்த தனிப்பட்ட வகுப்பாரிடமோ அல்லது எந்த குறிப்பிட்ட கூட்டத்தாரிடமோ சிறிதும் பகைமை உணர்ச்சியோ வெறுப்புணர்ச்சியோ கிடையாது, கிடையவே கிடையாது. கழக இலட்சியங்களை மனமார ஒப்புக்கொண்டு அவற்றை நடைமுறையில் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்ளும் தென்னாட்டவர் எவரையும் எந்த சாதியினரையும் தன்பால் அணைத்துக்கொள்ள அது சிறிதும் தயங்குவதில்லை. வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறோம், திராவிடர் கழகம், பிராமணீயத்தை விலக்கத் தயாராய் இருக்கும் எந்தப் பிராமணரையும் தன்பால் சேர்த்துக்கொள்ள எப்போதும் மறுத்ததில்லை. கழகத்தின் நோக்கமெல்லாம் எப்படியாவது நம் சமுதாயத்தில் உள்ள குறைபாடுகள் நீங்கி, இழிவுகள் துடைக்கப்பட்டு, துக்கம் மறைந்து, வேதனை ஒழிந்து, விபரீதங்கள் தொலைந்து, வறுமை, சாதிப்பித்து, பழமை வெறி, புராண இதிகாச மோகம், தலைவிதி தத்துவம் முதலிய முன்னேற்றத் தடைச் சக்திகள் முறியடிக்கப்பட்டு, இன்பப் புதுவாழ்வு வாழும் நிலை ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்படவேண்டும் என்பதுதான். இந்தப் புது நிலை ஏற்பட யார் உதவி செய்வதாயினும் சரி, திராவிடர் கழகம், அவ்வுதவியை, இரு கை நீட்டி வரவேற்கத் தயாராய் இருக்கிறது.

கழகம் எதிர்ப்பது, ஒழிக்க எண்ணுவது, ஒழித்தே தீரவேண்டும் என்ற திட்டமான முடிவுடன் போராடிக்கொண்டிருப்பது பிராமணீயத்தை—பிராமணரை அல்ல! பிராமணீயம் வேறு, பிராமணர் வேறு! தானும் தன் கூட்டத்தாரும் மட்டுமே ஆண்டவனின் பிரத்யேக அருளுக்குப் பாத்திரமானவர்கள், தாங்கள் மட்டுமே கடவுட்சாதி, தாங்களே மனித சமுதாயத்தின் பூதேவர்கள், தங்களுக்கே இந்த உலகம் சொந்தம், உலகில் உள்ள ஏனையோர் யாவரும் தங்கள் சுண்டு விரல் அசைந்தால் அதற்கேற்ப அசையவேண்டியவர்களே தவிர தமக்கென்று சொந்த வாழ்க்கையோ சொந்த சொத்தோ சொந்த நடைமுறைத் திட்டங்களோ கொண்டிருக்கக் கூடாதவர்கள் என்றெல்லாம் கருதும் ஆணவ மனப்பான்மைக்குத்தான் பிராமணீயம் என்று பெயர். இந்தப் பிராமணீயம், "தாம் மட்டுமேதான்

(10-ம் பக்கம் பார்க்க)

ஆபத்து! ஆபத்து!

இந்து மதத்திற்குப் பேராபத்து!

★

"ஆபத்து! ஆபத்து! இந்துமதத்திற்குப் பேராபத்து!"

மறுபடியும் கேட்கிறது இந்த அழுகுரல்!

சென்னை சட்டசபையில் இந்த அழுகுரல் ஓய்ந்து இன்னும் ஒரு மாதகாலம் கூட ஆகவில்லை. இதற்குள் டில்லி சட்டசபையில் இதே அழுகுரல் இப்போது கேட்கிறது!

வைத்தியநாத அய்யர்கள் இந்த அழுகுரலை எழுப்பி, அக்குரலை ஹிந்து, மித்திரன், தேவி முதலிய ஏடுகளின் மூலம் ஒலி பரப்பி, அகில அண்டத்தையும் அதிரச் செய்த அத்தியாயத்தின் கடைசி பாராகூட இன்னும் எழுதிமுடியவில்லை. இதற்குள் லக்ஷ்மிகாந்த மைத்ராக்கள் இதே அழுகுரலின் இரண்டாம் அத்தியாயத்தை வேக வேகமாக வாசிக்கிறார்கள்.

"ஆபத்து! ஆபத்து! இந்துமதத்திற்கு ஆபத்து!" என்று அதிர்வேட்டு கிளப்பினார்கள் சென்னை சனாதனிகள், வைதீக வட்டாரங்கள் படைதிரண்டு கிளம்பின, பிராம்மணகுல ரக்ஷகர்கள் விட்டோமா பார் ஓமக்குராரை என்று முப்புரி நூலை உருவிக்கொண்டெழுந்தனர், தீக்ஷிதர்களும் சாஸ்திரிகளும் சர்மாக்களும் சகல கலாபண்டிதர்களும் புறப்பட்டனர் பரணைமேல் தூங்கிக்கொண்டிருந்த பஞ்சாங்கக்கட்டை கையில் ஏந்திக் கொண்டு, மடாலயத் திருத்த மசோதாவை ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்று சூளுரை புகன்றார்கள்—இவ்வளவும் இங்கே! சென்னையில்!

இப்போது டில்லியில், இந்திய சட்ட சபையில், இதே நாடகம் நடத்தப்படுகிறது. கதை வசனம் பூராவும் இதேதான்! காட்சிகளும் திரைகளும் டர்னிங் சீன்கள் உட்பட எல்லாம் இவையேதான்! ஆனால் நடிகர்கள்தான் வேறு! வேறு! இங்கே வைத்தியநாத அய்யர்கள்! அங்கே லக்ஷ்மிகாந்த மைத்ராக்கள்!

சென்னையில் சனாதன சிங்கங்கள் கர்ஜித்தெழுந்ததற்குக் காரணம், சென்னை முதலமைச்சர் மடங்களிலும் கோயில்களிலும் நடைபெறும் மமதைச் செயல்களை, திருட்டு புரட்டுகளை, ஒழித்துக் கட்டுவதற்கான மசோதா கொண்டு வந்திருப்பது!

டில்லியில் வைதீக வம்பர்கள் பழைய ஐதீகங்களை அடுக்கடுக்காகக் காட்டி "அந்தோ இது ஆமா! ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் சம்பிரதாயங்கள் அழியப் போமா!" என்று காட்டுக் கூச்சல் எழுப்புவதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டோர் தலைவர், அறிஞர் ஏறு, டாக்டர் அம்பேத்கார் டில்லி - சட்டசபையில் கொண்டு வந்துள்ள இந்து சட்டத் திருத்த மசோதா!

சென்னை அறநிலையப் பாதுகாப்புத் திருத்த மசோதாவைப் போலத்தான் டில்லி இந்து சட்டத் திருத்த மசோதாவும் அப்படி ஒன்றும் பெரிய புரட்சிகரமான மசோதா அல்ல! என்றாலும் இங்கே சில சனாதன தர்மிகள் இந்த மசோதாவை எதிர்ப்பது போலத்தான் அங்கேயும் சில சனாதனச் சழக்கர்கள் அந்த மசோதாவையும் எதிர்க்கிறார்கள். இவர்கள் இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு என்னென்ன காரணங்களைக் கூறுகிறார்களோ அதே காரணங்களைத்தான் அவர்களும் அந்த மசோதாவை எதிர்ப்பதற்கும் கூறுகிறார்கள். இன்னொரு முக்கியமான குறிப்பு! இரண்டு இடங்களிலும் சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவு

உள்ளம் படைத்தவர்கள், முற்
போக்கான எண்ணம் கொண்ட
வர்கள், நேர்மையான பண்பும்
நியாயத்துக்குக் கட்டுப்படும் போக்
கும் படைத்தவர்கள் ஆகிய எல்
லோரும் கட்சி வேறுபாடின்றி,
சாதி வேறுபாடின்றி, வேறு எத்
தகைய வேறுபாடுமின்றி இரண்டு
மசோதாவையும் ஆதரிக்கிறார்கள்.

சென்னை மசோதாவின் நோக்
கங்கள் இரண்டு:—

1. இதுவரை மடங்களிலு
கோயில்களிலும் சொத்து சூறை
யாடப்பட்டு வருவதை உடனே
தடுத்து இனியேனும் இத்தகைய
சுயநலச் சூறுவளியில் கோயில்க
ளும் மடங்களும் சிக்கிச் சிதையா
வண்ணம் அவற்றைப் பாதுகா
பது.

2. இந்த நோக்கத்தை நிறை
வேற்றுவதற்காக கோயில்களையும்
மடங்களையும் சர்க்காரின் நேர
மேற்பார்வையின்கீழ் கொண்
வருவது.

நாட்டு நலனில் அக்கரையும்
பொதுநல வாழ்க்கையில் ஈடுப
வோரின் ஒழுக்கம் அப்பழுக்கின்றி
இருக்க வேண்டியதன் இன்றி
யமையாமையைப் பற்றிய நல்
லுணர்ச்சியும் கொண்ட எவரும்
இந்த இரு நோக்கங்களைத் தவறு
என்று கூறமாட்டார்கள்.

டில்லி மசோதாவின் நோக்க
ங்கள் நான்கு.

1. இந்து மத சட்டம் என்
இப்போது வழங்கப்படுவது பெ
தும் இக் காலத்திற்கு ஒவ்வா
தாகவும் பல இடங்களி
பழுது பார்க்கப்பட வேண்
டியதாகவும் உள்ள ஓர் பழங்கால
கட்டிடம். ஆகவே அக் கட்டிட
இனியும் நிலைத்திருக்க வேண்டு
னால் உடனடியாக அதில் பல சீ
திருத்தங்கள் செய்யப்பட்ட

வேண்டும் இல்லையேல் அது இடிந்து விழுந்துவிடும்.

2. சீர்திருத்தவாதிகள், சாதி வேறுபாட்டை விரும்பாதவர்கள், சாதிக் கோட்டைகளை இடித்து வீழ்த்த விரும்புபவர்கள் ஆகிய பல சாராரும் இந்து மதத்திற்குள்ளே உள்ள பிராமணர் க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் ஆகிய நால்வேறு சாதிகளுள் ஏதேனும் ஒரு சாதியைச் சேர்ந்தவராக இருந்து, அவர்கள் மணக்க விரும்பும் ஆண் அல்லது பெண் வேறு ஏதேனும் ஒரு சாதியைச் சேர்ந்தவராக இருந்தால், இப்போதுள்ள இந்து மத சட்டப்படி அவர்கள் திருமணம் செய்துகொள்ள முடியாது செய்து கொண்டால் மணம் செல்லாது. சாதி வேறுபாடு முற்றிலும் ஒழியவேண்டும் என்னும் நற்கொள்கை பரவிவரும் இந்நாளில், இவ்வண்ணம் இந்து சட்டத்தின் மூலமாக சாதி வேறுபாடு நிலைநாட்டப்படுவது பெருங்கொடுமை ஆகவே இக் கொடுமை ஒழிக்கப்பட்டு, இந்து மதத்திற்குள் சாதி வேறுபாடின்றி எந்த இந்து ஆண் அல்லது பெண்ணும் தனக்கு விருப்பமான வேறு எந்த இந்து பெண் அல்லது ஆணையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

3. திருமணம் செய்துகொள்வதில் சாதித் தடை இருப்பது போலவேதான், இப்போதுள்ள இந்து சட்டத்தில், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதிலும் சாதித் தடை இருக்கிறது. அதாவது இப்போதைய இந்து சட்டப்படி ஒரு பிராமணன் ஒரு "சூத்திரக்" குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள முடியாது; ஒரு "சூத்திரன்" ஒரு பிராமணக் குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள முடியாது. அவரவர்கள் அந்தந்த சாதிக்குள்ளேயே ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டால்தான் செல்லும். இந்த சாதிக் கட்டுப்பாடு பகுத்தறிவுக்கு முரண்பட்டது. இதுவும் தொலையவேண்டும். எந்த இந்துவும் இந்து மதத்தைச் சேர்ந்த வேறு எவரையும் அவர் எந்த சாதியாராய் இருந்தாலும் ஸ்வீகாரம் எடுக்கலாம் என்று சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

4. இப்போதைய இந்து சட்டப்படி, பெண்களுக்குச்சொத்துரிமை கிடையாது. தகப்பன் இறந்து போனால் அவன் சொத்து முழுதும் பிள்ளைகளுக்குத்தான் போகுமே தவிர பெண்களுக்குப் போகாது. பெண்களை ஆண்களின் அடிமைகளாகக்கருதி நடத்திய அந்தக் காலத்திற்கு இந்த சட்டம் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே என்ற சிரிய கொள்கையை பழமைப் பித்தர் தவிர பிறர் எவரும் ஒப்புக்கொள்ளும் இந்நாளிலே ஆண் குழந்தைகளைப் போலவே பெண் குழந்தைகட்கும் சொத்துரிமை இருக்கவேண்டியது அவசியம். இதற்கேற்றபடி இந்து சட்டம் திருத்தப்படவேண்டும்.

இந்தியாவின் வீழ்ச்சிக்கே முதல் காரணம் இங்கே வேரூன்றிவிட்ட வர்ணாஸ்ரம சாதிஅமைப்பு முறைதான் என்பதையும், இந்தியா இனி தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானால் அதற்காகச் செய்யப்பட வேண்டிய முதற் பெருங்காரியம் இந்த சாதிக்கோட்டைகளின்மீது ஒரு பலமான அணுக்குண்டை வீசுவதுதான் என்பதையும், பெண்களுக்கு சம சொத்துரிமை தந்து அவர்களை ஆண்களுக்கு ஒப்ப நடத்தவேண்டியது பெண்கள் கவர்னர்களாகவும் அமைச்சர்களாகவும் டாக்டர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கும் இந்நாளில் மிகவும் அவசியமான சீர்திருத்தம் என்பதையும், சீர்திருத்த நோக்குடைய எவரும் மறுக்கமாட்டார்கள். மறுப்பதில் அர்த்தமுமில்லை.

சென்னை மசோதா கோயில்களிலும் மடங்களிலும் நடைபெறும் அட்டூழியங்களைத் தடுக்க வேண்டும் என்னும் அதன் நோக்கத்தை நிறைவேற்ற சர்க்கார் சார்பில் பல கமிஷனர்களை நியமித்து, கோயில்கள் மடங்கள் இவற்றின் செலவுத்திட்டம் வகுப்பது, அவற்றை அமுலுக்குக் கொண்டு வருவது, கோயில் அர்ச்சகர்களை நியமிப்பது, மடாதிபதிகள் ஸ்தானம் காலியானால் வேறு தக்க மடாதிபதிகளை நியமிப்பது, தவறான வழியில் கோயில், மட, சொத்துகளைக் கையாள்வோரைத் தண்டிப்பது, தேவையானால் அவர்களை விலக்குவது போன்ற அதிகாரங்களை அவர்களுக்குத் தருகிறது.—இது தவறு?

டில்லி மசோதா, சாதித் தடைகளை விலக்குவது, பெண்களுக்கும் சம உரிமை தருவது ஆகிய நன்நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கீழ்க்கண்டபடி சட்டத்தைத் திருத்தி அமைக்கிறது: 1. இந்துக்கள் சாதி வேறுபாடின்றி திருமணம் செய்து கொள்ளலாம். 2. இந்துக்கள் சாதி வேறுபாடின்றி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம். 3. மகளுக்கு மகனைப் போலவே சம சொத்து உண்டு. 4. ஏகதார முறையே அமுலில் இருக்கவேண்டும். இருதாரம் அனுமதிக்கப்பட மாட்டாது. 5. இதற் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் விவாக ரத்து செய்து கொள்ளும் உரிமை தம்பதிகளுக்கு உண்டு —இந்த விதமாக இந்து சட்டத்தைத் திருத்தப்பாடு செய்வது குற்றமா?

"அல்ல! அல்லவே அல்ல! தவறே அல்ல! குற்றமே அல்ல! செய்யவேண்டிய சீர்திருத்தத் திட்டங்களின் முழு உருவம்கூட அல்ல, சின்னஞ்சிறு பகுதியே இவை!" என்பீர்கள் நீங்கள்! ஆனால், "இந்த இரு மசோதாக்களும் நிறைவேறினால் இந்துமதமும் அழிந்தே போய்விடும்—ஆபத்து ஆபத்து, இந்து மதத்திற்கு ஆபத்து!" என்று தம்பலம் கொண்ட மட்டும் கூப்பாடு போடுகிறார்கள் வைத்தியநாதய்யர்கள்—இங்கே! லக்ஷ்மிகாந்த மைத்ராக்கள் அங்கே!

"இவ்வளவு நியாயமான இரண்டு மசோதாக்களை நிறைவேற்றுவதாலேயா இந்து மதம் போய்விடும் என்று கூச்சலிடுகிறார்கள்—என்ன மௌற்றுத் தனங்கள் அப்பா அவர்கள்! இருட்டுக் குகைகள்போலும் அவர்கள் உள்ளம்!" என்று கேலி பேசுவீர்கள் நீங்கள்; "இந்த சாதாரண இரு மசோதாக்களாலே இந்து மதமே அழிந்துவிடும் என்று கூறுகிறார்களே அந்தக் குருட்டு விழியினர், இரண்டு மசோதாக்களாலேயே அழிந்துவிடக் கூடிய அவ்வளவு கோஞ்சல் பிள்ளையாக இந்துமதம் இருந்தால் அது அழிந்துதான் போகட்டுமே, நஷ்டமென்ன நமக்கு?" என்று நீங்கள் நல்ல தீர்ப்பும் வழங்கக்கூடும் ஆனால் அவர்கள் உங்களை நாஸ்திகர்கள் நச்சு நினைப்பினர்கள், நாசகாலர்

(12-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

5—3—49 சனிக்கிழமை

கவர் இரண்டணு, கார்டு முக்காலணு!

"அடுத்த ஆண்டு வெளிவந்துள்ள இந்திய சர்க்கார் பட்ஜெட்டை ஒரே வாக்கியத்தில் சுருக்கித் தருக."

பொருளாதார வகுப்பில் பயிலும் கல்லூரி மாணவர்கட்குத் தரப்படும் கேள்வித் தாளில் இது போன்றதோர் கேள்வி இருந்தால் மாணவர்கள் அனைவரும் ஏகமனதாகத் தரும் பதில் இப்படித்தான் இருக்கும்:

"கவர் இரண்டணு! கார்டு முக்காலணு!"

*   *   *

"ஏண்டா அயிலு! என்ன ரொம்போ ரொம்போ ரோசனை பண்றே?"

"ரோசனை ஒண்ணுமில்லை அண்ணேன் இனிமே முத்தியாட்டம் எங்க வூட்டுக்காரிக்கு அடிக்கடி கடுதாசி போட முடியாதண்ணேன் அதான் ரொம்ப கவலையா இருக்குதண்ணேன்! பாவம், அதுக்கு ஏங் கடுதாசியை பாக்கலேண்ணு உசுரே போய்டும் அண்ணேன்!"

"ஏண்டா அயிலு! ஏன் உனக்கு என்ன கஷ்டம் வந்துச்சு! கடுதாசி வாங்க துட்டு இல்லியா?"

"ஆமா அண்ணேன்! பொறக்கற மாசத்திலேந்து கடுதாசி மூணு துட்டாம் அண்ணேன்! கவரு எட்டு துட்டாம் அண்ணேன்! இம்மாம் துட்டு குடுத்து நான் எங்கேந்துண்ணேன் கடுதாசி எழுதப் போறேன்!"

"அடி அம்மா! கடுதாசி மூணு துட்டா இனிமேதொட்டு!"

"ஆமாண்ணேன் ஆமா! ஆமா! ஆமா!"

இந்திய பட்ஜட் வெளியான மறுதினம், கட்டை வெட்டும் கந்தனும் தெருப்பெருக்கும் அயிலும் சந்தித்தால், அவர்கள் பேச்சு இதுபோலத்தான் இருந்திருக்கும்.

*   *   *

"தாத்தா! எனக்கு ஒரு காலணு குடு தாதா!"

"போடா போக்கிரிக் கழுதை! என்கிட்ட ஏதுடா காலணு?"

"மூணு காலணு வச்சி இருந்தியே தாத்தா செத்தே முன்னே, துணியிலே முடிஞ்சி வச்சிருந்தியே தாத்தா, முடியறபோது பாத்தனே தாத்தா!"

"அட சட்! அதையேன் பாத்தே! ஊரிலே இருக்கிற ஒங்க அம்மாவுக்கு கடுதாசி போடறதுக்காகவல்லோ அதை வச்சிண்டிருக்கிறேன்!"

"கடுதாசி போடறதுக்கு மூணு காலணு ஏன் தாதா? அரையணு தானே ஒரு கார்டு! என்னை ஏமாத்திரியே தாதா!"

"போடா முட்டாள் பயலே! முக்காலணுடா கார்டு இனிமே முக்காலணு! போய் ஒங்க இஸ்கூல் வாத்தியாரை வேண்ணு கேளு! போ, போ!"

சிறிய கிராமத்தில், கூரை வீட்டு முற்றத்தில், கூனிக் குறுகி காலை மடக்கிக்கொண்டு அசந்து கிடக்கும் தாத்தாவுக்கும், அந்த தாத்தாவிடம் மிட்டாய் வாங்க துட்டு கேட்கும் பேரனுக்கு மிடையே, பட்ஜட், இதுபோன்ற உரையாடலைத்தான் கிளப்பி இருக்கும்!

*   *   *

"ஏண்டீ பத்மா! ஊரிலேருந்து ஏதாச்சும் லெட்டர் கிட்டர் வந்துதா?"

"எங்கடீ வருது லலிதா! இந்த காங்கிரஸ் கவர்மெண்டு வந்தாலும் வந்துச்சி, ஒன்றரையணு கவர் இரண்டணு ஆயிபோச்சி! முன்னியே 'அவர்' ரொம்ப லெட்டர் போடுவார்! இப்ப அடியோட நிறுத்திப் போட்டார்! 'அவர்' எழுத்தைப் பார்த்தே இரண்டு மாதம் ஆகுதுடீ! ஆமாம், 'உங்களவர்' ஏதாவது லெட்டர் போட்டாரோ?"

"லலிதா புருஷன் பத்மா புருஷனுக்கு மட்டமா என்ன? அவரும் அந்தக் கதைதான்! நல்ல கவர்மெண்டு வந்துதுடீ பத்மா நம்ம லெட்டர் போக்குவரத்தை நிறுத்திப்போட! இந்த கவர்மெண்ட் வந்தா அரையணு கார்டுகூட காலணு ஆயிடும், போடுங்கள் ஓட்டு காங்கிரசுக்கு என்று சொன்னாளே அடுத்த வீட்டு அபபுஜம் அதைக் கேட்டு ஓட்டும் போட்டோமே, நம்ம புத்திசாலித்தனத்துக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்!"

சாதாரண மத்தியதர குடும்பங்களைச் சேர்ந்த லலிதாக்களும் பத்மாக்களும், கிணற்றடியில துணி துவைக்கும் நேரத்திலோ, அல்லது குளத்தில் நீர் மொள்ளும் வேளையிலோ, ஒருவரை ஒருவர் காணும் போது, ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு அவர்கள் பேசிக் கொள்ளும் உரையாடல் இது போலத்தான் இருக்கும்!

*   *   *

"கருத்தா படி! உடம்பை ஜாக்கிரதையா கவனிச்சிக்கோ! அடிக்கடி சினிமாவுக்குப் போகாதே! வெயில் நேரத்தில் வெளியே சுத்தாதே! இருட்டின பிறகு அதிகமா வெளியே போகாதே! ரயிலிலே ஏறும்போதும் இறங்கும்போதும் பாத்து ஏறி இறங்கு!... ஆமாம், வாராவாரம் லெட்டர் போடறயா, தவறாமெ போடு"

"எல்லாம் சரிதாம் அம்மா ஆனல் வாராவாரம் லெட்டர் போடுன்னு சொல்றியே அதான்ம்மா முடியாது! இப்போ 1½ அணு இல்லேம்மா கவர், இரண்டணு! வாராவாரம் லெட்டர் போட்டுக்கினு இருந்தா நீங்க அனுப்பற

பணம் அதுக்கே சரியா போயிடுமே அம்மா!"

பட்டினத்தில் கல்வி பயிலச் செல்லும் தன் அருமை மகன் ரயிலில் ஏறிக்கொண்டு உட்கார்ந்திருக்க, ரயில் புறப்படப்போகும் நேரத்தில் அவனுக்குப் புத்திமதி கூறுகிறாள் தாய். இத்தகு நேரத்தில் தாயும் தனயனும் பேசிக்கொள்வர் இதுபோல — ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு!

* * *

"கவர் இரண்டணா! கார்டு அரையணா! இது பெருங் கொடுமை! ஏழைகளை இந்த கார்டு—கவர் கட்டண உயர்வு மிகவும் பாதிக்கும். ஒருபுறம், வறுமையால் மடியும் ஏழைகளுக்கு இப்படி மேலும் மேலும் கஷ்டங்களை உண்டுபண்ணிக்கொண்டே போய், மற்றொருபுறம் அதிக சௌகரியமாய் இருக்கும் முதலாளிகளுக்கு மேலும் மேலும் வரிவஜா செய்துகொண்டே இருப்பதென்றால், இது சர்க்காருக்கே நல்லதாகப்படுகிறதா என்று கேட்கிறேன்!"

பேராசிரியர் கே. டி. ஷா, இந்திய சட்டசபையில் பட்ஜட் உரையாடலின்போது இதுபோல உருக்கமாகக் கேட்டார்! தலையைக் குனிந்துகொண்டிருந்திருப்பர் மந்திரிகள் — யாரும் பதில் பேசவில்லை!

* * *

கவர் இரண்டணா — கார்டு முக்காலணா, இனி! இந்தக் கட்டண உயர்வு ஏழைக் குடும்பங்களையும் சிறிய மத்தியதரக் குடும்பங்களையும் எவ்வளவு பாதிக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை, மேலே கொடுக்கப்பட்டுள்ள உரையாடல்கள் ஒவ்வொன்றுமே உங்கட்கு அதை விவரமாகச் சொல்லும்!

இந்திய சர்க்கார், அடுத்த நிதி ஆண்டிற்கான தங்கள் வரவு செலவுத் திட்டத்தை சென்ற கிழமை டில்லி சட்டமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். அதிலே காணப்படும் அற்புதமான வரவுத் திட்டங்களிலே ஒன்றுதான் இனி கார்டு கவர் இரண்டின் விலையையும் இதுபோல அநியாயமாக உயர்த்துவது என்பது!

வெள்ளையர் ஆட்சி இங்கிருந்தபோது, ஓர் அணா கவரை ஒன்றே காலணாவாகவும், ஒன்றேகாலணா கவரை ஒன்றரையணாவாகவும் போர்க் காலத்தில் ஏற்பட்ட செலவைச் சரிக்கட்டுவதற்காக அவர்கள் உயர்த்தியபோது, "தேசியவாதி"கள், ஏழைகள் முதுகு முன்னமே முறிகிறதே, ஈவு இரக்கமின்றி இந்தப் பெரும் சுமையையுமா அம் முதுகுமேல் தூக்கி வைக்கிறீர்கள், அடுக்குமா இது? நீதியா, முறையா, தர்மமா, ஜீவகாருண்யமா, இருதயம் இல்லையா உங்களுக்கு, அவர்கள் படும் வேதனையை எண்ணிப் பார்க்க நேரமில்லையா?" என்று கூவினர், கொக்கரித்தனர். ஆர்ப்பாட்டம் பல செய்தனர், ஆயிரமாயிரம் மேடைகளில் அக்கிரமம் அக்கிரமம் என்று வீரமுழக்கமிட்டனர், "ஆகட்டும்—எங்கள் ஆட்சி வரட்டும், இந்த வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் 1½ அணா ஆக்கிய கவரை நாங்கள் முக்காலணா ஆக்கிவிடுகிறோம், கார்டை, விக்டோரியா ராணி காலத்தில் இருந்ததைப் போல காலணா ஆக்கிவிடுகிறோம்" என்று இனிக்க இனிக்கப் பேசினர் சத்தியங்கள் பற்பல செய்தனர்! அவர்கள் எதிர்பார்த்தது போல ஆட்சிக் கயிறு அவர்கள் கரத்திற்கு வந்திருக்கிறது ஆனால் கார்டு காலணாவாகவில்லை, கவரும் முக்காலணாவாகவில்லை—விலை ஏறியிருக்கிறது, வெள்ளையன் காலத்தைவிட அதிகமாக ஏறியிருக்கிறது!

இப்போது இந்த "தேசபக்த திலகங்கள்" சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் ஏழைகளுக்குக் கிடைத்துள்ள 'இடி' இது மட்டும் தானா? இல்லை! ஜவஹர் சர்க்கார் இந்த திட்டத்தின்மூலம் ஏழைகட்குத் தந்துள்ள அன்பளிப்பு இதுபோலப் பல இருக்கின்றன—பலப்பல!

பாக்கு, ஏழைகளின் பண்டம். அதன் மீதுள்ள வரி இனி ஒன்றரை மடங்காக உயர்கிறது.

மெல்லிய துணி, நடுத்தரத் துணி, மோட்டா துணி இவற்றின் மீதுள்ளவரியும் உயர்கிறது. இந்த வரியை மில் முதலாளிகள் தங்கள் 'கஜானா'விலிருந்து எடுத்துத்தரப் போவதில்லை. துணி விலையை ஏற்றி, வாங்குபவர்களிடமிருந்து பணத்தைப் பறித்தெடுத்து சர்க்காருக்கு தரப்போகிறார்கள்—அதாவது ஏழைகளுக்கு இன்னொரு இடி இந்த வரி!

கண்ணாடிப் பொருள்கள், சாதாரண சில்லரைப் பொருள்கள், மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் இவற்றின்மீதுள்ள வரிகள் எல்லாமும் அதிகரிக்கின்றன— மத்தியதர குடும்பத்தாருக்குக் கிடைத்துள்ள பரிசுகள், இவை!

ஏழைகள் மீதும் குறைந்த வருவாயுள்ள மத்திய தரக் குடும்பத்தவர் மீதும் இதுபோல ஏராளமான புதிய பெரிய வரிச்சுமைகள் ஏற்றி வைக்கப்படுகின்றன, அவர்களுக்கு இவற்றைத் தாங்கும் சக்தியில்லை என்பதைச் சிறிதும் அறியாத டில்லி சர்க்காரால்! "ஏன் இப்படி ஏழைகளை வதைக்கிறீர்கள், நியாயமா?" என்று கேட்டால், நிதிமந்திரி டாக்டர் மத்தாய், ராணுவச் செலவு இமயமலைபோல் பெருகிவிட்டது, அகதிகள் செலவு ஏராளம், உணவுப் பிரச்னை மலை விழுங்கி மகாதேவனாக இருக்கிறது, இவ்வளவுக்கும் பணம் வேண்டுமே—வரி போடாமல் வேறென்ன செய்வது" என்று கோபமாகப் பேசுகிறார். ஆனால், "ஏழைகள் மீது இவ்வளவு அதிக வரிப் பளுவை ஏற்றி வைக்கிறீரே, கொள்ளை லாபமடிக்கும் முதலாளிகள் உம் கண்ணுக்குத் தெரியவில்லையோ?" என்று கேட்டாலோ அவர் தெரிகிறது தெரிகிறது என்று சொல்லிக்கொண்டேபோய், அவர்களுக்கு ஏற்கனவே போடப்பட்டிருந்த இரண்டொரு வரிகளையும் எடுத்துவிடுகிறார்! ஆச்சரியம் ஆனால் உண்மை! நம்மால் நம்ப முடியவில்லை, என்றாலும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறார் சமதர்ம வீரர் என்று ஜகம் முழுவதும் பெயர்வாங்கிய ஜவஹர்லால் அவர்களின் நிதி அமைச்சர்!

மூலதன லாபவரி இனி கிடையாது. இதனால் சர்க்கார் இழப்பது ரூ. 1 கோடி.

10,000 ரூபாய் வரையுள்ள வருமானத்திற்கான வருமான வரி காலணாவிதம் குறைக்கப்படும். வருமான வரியில் முதல் படியில் ஒரு அணாவாக இருந்த வரி முக்காலணா ஆகவும், 2-வது படியில் 2 அணாவாக இருந்த வரி 1 அணாவாகவும் குறைக்கப்படும். இத

[9-ம் பக்கம் பார்க்க]

தலை இருக்க வாலாடுகிறது!

பிப்ரவரி 24-ந் தேதியன்று டில்லி சட்டசபையில் 'ஹிந்தி வீரர்' சேத் கோவிந்ததாஸ் இந்திய தேசீய மொழி ஹிந்திதானா என்பது பற்றி டில்லி சர்க்காரின் முடிவான கருத்தென்ன என்று ஒரு கேள்வி கேட்டார். முதலமைச்சர் நேரு ஹிந்தி பிரச்சினையைப் பற்றி சர்க்கார் இன்னும் விவரமாக ஆலோசிக்கவில்லை என்றும் விவரமான பரிசீலனை முடிந்த பிறகே சர்க்கார் இந்திப் பிரச்சினை பற்றிய முடிவான கருத்தை வெளியிட முடியும் என்றும் தெளிவாகப் பதில் கூறியிருக்கிறார். மத்திய சர்க்கார் இந்திப் பிரச்சினைபற்றி இன்னமும் முடிவே செய்யவில்லை—ஆலோசனை புரியும் கட்டத்தில்தான் உள்ளனர். ஆனால் சென்னை சர்க்காரோ இந்திதான் இந்தியாவின் தேசீய மொழி என்று நெடுங்காலத்திற்கு முன்பே முடிவு செய்துவிட்டனர்! முடிவு செய்து விட்டதோடு மட்டுமா, பள்ளிக்கூடங்களில் இந்தியை கட்டாய பாடமாகவும் ஆக்கிவிட்டனர்! கட்டாயபாடமாக்கிவிட்டது மட்டுமா, கட்டாய பாடம் கூடாது என்று எடுத்துரைக்கும் கலைத் துறை அறிஞர்களை—கல்லூரிப் பேராசிரியர்களை உண்மையை உரைத்தால் வேலையைவிட்டு விலக்குவோம் என்று அச்சுறுத்தவும் முனைந்துவிட்டனர் இந்திகூடாது என்று சர்க்காருக்கு நல்லறிவு புகட்டும் பொதுமக்களையோ தடியாலடிப்போம் குடலை முறிப்போம் என்று சொல்லி வெல்லிங்டன் தர்பார் நடத்துகின்றனர்! மத்தியசர்க்காரோ இந்திப் பிரச்சினை பற்றி ஆலோசித்துக் கொண்டுதான் இருக்கின்றனர் இன்றுவரை! முடிவுக்கு வந்தபாடில்லை! பிரச்சினை அவ்வளவு சிக்கலாக இருக்கிறது—நேருவே கூறியிருக்கிறார்—டில்லி சட்டசபையிலேயே! ஆனால் மாகாண சர்க்காரோ ஹிந்தி வெறியில் மூழ்கியவர்களாய் ஹிந்தி ஹிந்தி எனக் கூவிய வண்ணம் உள்ளனர்! தலை இருக்க வாலாடுகிறது! இந்த "வாலாட்டம்" எத்தனை நாளைக்கு நடக்க முடியும்—பொறுத்திருந்து பார்ப்போம்!

ஐயோடா! அவர்களும் கஷ்டப்படுகிறார்களாம்!

இந்த ஆண்டு, சென்னை சர்க்கார், சட்டசபையில் சமர்ப்பித்துள்ள அறிக்கையைப் பிரித்துப் படித்தால் "அத்திப்பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை" என்ற பாணியிலேயே அது முழுவதும் ஏழைகளை வாட்டும் புது வரிகளையே தன்னகத்தே கொண்டதாக இருந்தாலும், "ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று சொல்வார்களே அதைப்போல, அதில் ஒரே ஒரு நல்ல அம்சமும் இருக்கிறது. அதுதான் எத்தனையோ ஆண்டுகளாக வரியே இன்றித் தப்பித்துவரும் ஓட்டல்களுக்கு வரி விதிப்பது என்பது! ஓட்டல்கள் என்றவுடனே அவற்றில் 100-க்கு 90-பங்கு எந்த இனத்தாருடையன என்பதை நாம் சொல்லத் தேவையில்லை! அவை இத்தனை ஆண்டுகளாக வரியே இன்றித் தப்பித்துக் கொண்டதிலிருந்தே அவை எந்த இனத்தாருடையதாய் இருக்கும் என்பதை யாரும் அறிந்துகொள்வர்! இத்தனை ஆண்டுகள் வரியே செலுத்தாமல் இருந்த இவர்களுக்கு இப்போதாவது வரி விதிக்கும் நிலை ஏற்பட்டதே என்றுதான் மற்ற ஏழை மக்கள் தாங்கும் வரிப் பளுவைக் கண்டு வருந்தும் எவரும் கூறுவர்! ஆனால் சென்னை ஓட்டல் முதலாளிகளின் சங்கத்தின் முன்னாள் தலைவர் என்ற பட்டப்பெயரை சூட்டிக் கொண்ட வி. ஆர். ராமநாத அய்யர் என்ற "அருமறை அந்தணாளர்" ஒருவர் என்ன கூறுகிறார் தெரியுமா? இது பிராமணர்களுக்குக் கிடைத்த மற்றொரு இடியாம்! அவர்கள் ஏற்கனவே ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம், இனி இந்தக் கஷ்டமும் வந்துவிட்டால் அவர்களால் தாங்கவே முடியாதாம்! கேட்டீர்களா கதையை! அவர்களும் கஷ்டப்படுகிறார்களாமே! என்ன ஆச்சரியம்! அது என்ன கஷ்டமாயிருக்கும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தோம், நமக்கு விளங்கவேயில்லை! பக்கத்து வீட்டுப் பாலன்தான் கூறினான் கடைசியில், "அளவுக்கு மீறி சாப்பிட்டுவிட்டு ஜீரணம் ஆகாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே சார் அவர்கள்! இது தெரியாதா உங்களுக்கு?"

என்றான் அவன். பையன் குறும்புக்காரன்! ஆனால் காரணமின்றி மட்டும் குறும்பு பேச மாட்டான்! ஆனால் தைரியம் அதிகம்! பாருங்களேன் எவ்வளவு தைரியமாக பிராமணோத்தமர்களைப்பற்றி இப்படிக் கூறி விட்டான்! அவர்களின் வலது கரத்தில் அக்கினிதேவன் வாசம் செய்கிறானமே சார், அவர்கள் தங்கள் கரத்தைத் தூக்கி இவனை "ஆசிர்வாதம்" செய்ய வந்து விட்டார்களானால் இவன் கதி என்ன சார் ஆவது?

இமயமலை நகர்ந்தது!

கோவை ஜி.டி. நாயுடு தமிழகத்தில் தோன்றியுள்ள ஒப்பற்ற அறிஞர். இந்தியாவிலேயே தலை சிறந்த விஞ்ஞானி. நம்மாலே நினைத்துப் பார்க்கவும் முடியாத அற்புதமான பல சாதனைகளை அவர் செய்துகாட்டியிருக்கிறார். அவருடைய பொறி இயல் அறிவு, அபாரம்! இந்திய உப கண்டத்திலேயே சிறந்த மூளைகள் என்று நான்கு பேரைப் பொறுக்கியெடுத்தால் அதிலே ஒருவராக இருப்பார் அறிஞர் நாயுடு. ஆனால் இந்நாட்டு சர்க்காரோ— மாகாண சர்க்காரும் சரி, மத்திய சர்க்காரும் சரி, அந்த கிடைத்தற்கரிய பொக்கிஷத்தை—அல்ல—அற்புதமான அறிவுக் களஞ்சியத்தை இது வரை பயன்படுத்தத் தவறி விட்டனர். 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவிலிருந்து பல கம்பெனிகள் அவருடைய அரிய கண்டுபிடிப்புகளின் உரிமைகளை போட்டி போட்டுக்கொண்டு விலைக்கு வாங்க ஓடி வருகின்றனர். ஆனால் இந்த நாட்டு சர்க்கார்களோ அந்த மேதையின் அறிவை நாட்டுப் பொது வுடமையாக்கத் தவறிவிட்டனர். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் சென்னை சர்க்கார் தம் கைத்தொழில் போர்டில் உறுப்பினராக இருக்கும்படி அவரை அழைத்துள்ளனர். இந்தச் சாதாரண வேலையில் தம் அரிய நேரத்தை வீணாக்க அந்தப் பேரறிஞர் ஒப்புக் கொள்வாரா என்பது வேறு விஷயம். ஆனால் இப்போதாவது இத்தகைய அரிய விஞ்ஞானியின் அறிவுத்திறமை துருப்பிடித்துக் கிடக்கும்படி விட்டிருப்பது நாட்டுக்கும் நாட்டு மக்களின் எதிர்காலத்திற்கும் பெரிய நஷ்டம் என்பதை சர்க்கார் உணரத் தொடங்கியிருக்கிறதே, அது தான் மகிழ்ச்சிக்குரிய விஷயம்!

—

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

னால் சர்க்காருக்கு இழப்பு, ரூபா மூன்று கோடி.

சூப்பர் வரி பல விதமாகக் குறைகிறது. இதனால் முதலாளிகட்கு நிகர லாபம் ரூபா 2 கோடி 10 லட்சம்!

பெட்ரோல் வரி பாதியாகக் குறைகிறது இதனால் சர்க்காருக்கு கஷ்டம் அதாவது முதலாளிகட்கு லாபம் ரூ. 40 லட்சம்!

இவை, இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின்மூலம் முதலாளிகளின் முதுகை எவ்வளவு அன்போடு — அல்ல! — எவ்வளவு பயபக்தியோடு தடவிக்கொடுத்திருக்கிறார் "தேசிய" சர்க்காரின் "தேசிய" நிதி அமைச்சர் என்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள்!

ஏழைகளுக்கு ஏற்கெனவே போடப்பட்டிருக்கும் வரி ஒன்றுகூட எடுபடவில்லை, மாறாக பாக்குவரி கண்ணாடிவரி தபால்கட்டண உயர்வு என்று இப்படி வரிசை வரிசையாகப் புதுப்புது வரிகள் அவர்களுக்கு!

முதலாளிகட்குப் புதிதாக ஒரு வரியும் போடப்படவில்லை! ஆனால், இருக்கும் ஒரு சில வரிகளும் ரத்தாகின்றன அல்லது குறைகின்றன அல்லது மறைகின்றன அல்லது இளைக்கின்றன அல்லது கூனிக் குறுகுகின்றன அல்லது தேய்ந்து மடிகின்றன!

ஏழைகள் வயிற்றுக்கு—கல்!

முதலாளிகள் முடிமீது—கிரீடம்!

இதுதான் டாக்டர் ஜான் மத்தாய் இப்போது நாட்டு மக்கள் முன்னாலே நீட்டிக் காட்டியுள்ள சுதந்தர சர்க்காரின் சுதந்தர பட்ஜட்!

* * *

"இந்த பட்ஜட் ஏழைகளை மேலும் மேலும் ஏழைகளாக ஆக்குகிறது; பணக்காரர்களை மேலும் மேலும் பணக்காரர்களாக ஆக்குகிறது" என்று டில்லி சட்டசபையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டியிருக்கிறார் தோழர் டி. பிரகாசம். இதை எடுத்துக் கூறியவர் திராவிடக் கழகத்தவராய் இருந்தால் "தேசத்துரோகிகள் அப்படித்தான் பேசுவார்கள், இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க எமக்கேது நேரம்?" என்று எளிதில் கூறிவிடலாம், ஆனால் இப்போது இதைப் பேசியிருப்பவரோ டி. பிரகாசம்! அவரோ, காங்கிரஸ் இயக்கத்தின் ஆந்திரகேசரி! மாஜி பிரதமர்! பழுத்த காங்கிரஸ் பழம்! தேச சேவையிலேயே ஐம்பதாண்டுகளாக ஊறித் திளைத்து நரைத்து முதிர்ந்த பழம் பெரும் கிழவர் அவர் என்று காங்கிரஸ்காரர்களாலேயே பெருமையாக வர்ணிக்கப் படுபவர் தோழர் பிரகாசம். எனவே இந்த வார்த்தைகளின் உள்ளுறையை தேசத் துரோகிகளின் காட்டுக்கூச்சல் என்று எவரும் கூறிவிட முடியாது.

* * *

"மூடுக்கான முதலாளித்வத்தின் பொன்னான திருவடிகளே சரணம்!" என்று முதலாளிகளின் காலிலே இப்படி சிறிதும் வெட்கமின்றி வீழ்ந்து வணங்கி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறாகள் காங்கிரஸ் சர்க்கார். "சீ! இதென்ன வெட்கக்கேடு!" என்று நாம் எடுத்துச் சொன்னால் கோபம் மட்டும் எங்கிருந்தோ குதித்துக் கொண்டு வந்துவிடுகிறது காங்கிரஸ்காரர்களுக்கு!

கோபம் மட்டும் வந்தால் போதுமா? செயலில் அல்லவா நேர்மை இருக்கவேண்டும்!

—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆளப்பிறந்தவர்கள் பிறரெல்லாம் தம் கீழ் அடங்கிக் கிடக்கப் பிறந்தவர்கள்" என்ற திமிர்வாதம், ஹிட்லரையும் பிடித்தாட்டிற்று. அவன், ஜெர்மானியர்தான் உலகத்தையே ஆளும்படி ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தவர் என்று கூறினான், அந்தக் கூற்றை நடைமுறைக் கீதமாக ஆக்க ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினான். ஹிட்லரைப் போலவேதான், ஹிட்லரின் கடுங்கோபத்திற்கு ஆளான யூதர்கள் என்ற ஒரு வகுப்பாரும் பன்னெடுங்காலமாக, தாங்கள்தான் கடவுளின் தனி அன்புக்குப் பாத்திரமான பிரத்யேக சாதி (Chosen Race) என்று "பிராமணீயம்" பேசிவந்தனர். இந்த நாட்டிலேயும், சிலர், இப்படித்தான் பேசிவருகின்றனர். இந்தத் திமிர்வாதத்தைத்தான் திராவிடர் கழகம் மண்டையிலடித்து மாய்த்தொழிக்கப் பாடுபடுகிறதே தவிர பிராமணர் என்ற சொல்லால் குறிப்பிடப்படும் ஒரு தனிப்பட்ட சாதியாரை ஒழிக்க அல்ல அது பாடுபடுவது! பிராமணீயத்தை விலக்கிய பிராமணரை அது போற்றத் தவறியதில்லை. அதுபோலவே பிராமணீயத்தைதம் கொள்கையாகக் கொண்டிருக்கும் பிராமணர் அல்லாதாரை அது தாக்கவும் தவறியதில்லை. அறிஞர் M. N. ராய் பிராமணர்—சாதியால்! ஆனால் அவர் பிராமணீயத்தை தன் உள்ளத்திலிருந்து கழற்றி எறிந்துவிட்டவர், புரட்சி உள்ளம் படைத்தவர், சீர்திருத்தச் செம்மல், பூணூல் அவர் மார்பில் கிடையாது, அதனை அவர் அறுத்து எறிந்து நீண்ட காலமாகிவிட்டது, அவரை, கழகம் போற்றாமல் இருந்தது கிடையாது. காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே பார்ப்பனர்தான் ஆனால் பூணூலை அறுத்து எறிந்தவர், சீர்திருத்த உள்ளம் படைத்தவர், அவரை திராவிடர் கழகம் பார்ப்பனர் என்ற காரணத்திற்காக எப்போதும் தாக்கியதில்லை. இக்காலத்திய சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகிய பார்ப்பனத் தோழர் வ. ரா. பல சமயங்களில் புரட்சிகரமான கருத்துகளை மக்கள் மன்றத்தில் பொழிகிறார், அவரை அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று சொல்லி நாம் பெருமிதத்துடன் பாராட்டாமல் இருந்ததில்லை. காலஞ்சென்ற கவிஞர் பாரதியார் பிராமணர்தான் ஆனாலும் அவருடைய கவிதை உள்ளத்தில் பிராமணீயம் இல்லை எனவே அவரைப் போற்றியிருக்கிறோம், போற்றுகிறோம். இதுபோலவேதான் இப்போது அறநிலையப் பாதுகாப்பு மசோதாவைக் கொண்டுவந்திருப்பவர் தோழர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள்! அவர் பார்ப்பனர் என்ற காரணத்திற்காக அதனை நாம் ஆதரிக்காமல் இருக்கவில்லை. அல்லது அமைச்சர் அவினாசியார் பார்ப்பனர் அல்லாதார் என்ற காரணத்திற்காக அவர் கொண்டுவந்த இந்தித் திட்டத்தை நாம் ஆதரித்தோமா? ஜமீன்தார்கள் பார்ப்பனரல்லர் என்பதற்காக அவர்கள் ஒழியவேண்டும் என்று மசோதா, சட்டசபையில் வந்தபோது, நாம் கூடாது என்றோமா? டி. கே. சி. பார்ப்பனரல்ல என்பதற்காக அவருடைய "கம்பன் பித்தினை" நாம் போற்றினோமா? முதலமைச்சர் ஓமந்தூரார் பார்ப்பனரல்ல என்ற காரணத்தால் அவர் காலத்தில் செய்யவேண்டிய குடந்தை உரிமைப் போராட்டத்தைச் செய்யாமல் இருந்தோமா? மடாதிபதிகள் பார்ப்பனரல்லாதார்கள்—ஆகவே அவர்களை ஒழிக்கும் மசோதா கூடாது, ஆகாது என்று "வகுப்புவாதம்" பேசினோமா? குமாரராஜா பார்ப்பனரல்லாதார்தான், என்றாலும் அவர் சர் பட்டத்தை விட மறுத்தபோது கட்சியைவிட்டு அவரை விலக்க மறுத்தோமா? பார்ப்பனர் சொல்கிறார் என்ற காரணத்தால் நியாயமான எதையாவது மறுத்து, பார்ப்பனரல்லாதார் சொல்கிறார் என்ற காரணத்தால் அநியாயமான எதையாவது நாம் ஆதரித்திருக்கிறோமா? எப்போதாவது, எக்காரணத்தாலாவது, நாம் இதுபோல வகுப்புவாத உணர்ச்சியோடு நடந்துகொண்டதாக யாராவது எந்த நிகழ்ச்சியையாவது எடுத்துக்கூற முடியுமா? வேண்டுமானால் பார்ப்பனர்கள் ஒரே காரியத்தை தங்கள் இனத்தவர் செய்தால் அதை ஆதரித்தும் பிற இனத்தவர் கூறினால் அதை எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள், காரிய மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கான எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை நாம் தரமுடியும். பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது, எட்டுக்கோடி முஸ்லிம்களின் இதய கீதம் அது என்று பெரியார் கூறியபோது ஐயையோ தேசத்தைத் துண்டாடுவதா என்று அலறிய "கல்கி" ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அய்யர், அன்பர் ஆச்சாரியார் அதையே கூறத் தொடங்கியதும் "ஆஹா! என்ன அற்புதமான யோசனையைத் தருகிறார் என் தலைவர் ராஜாஜி! இந்து முஸ்லிம் ஒற்றுமை வேண்டுமானால் பாகிஸ்தான் கொடுத்துவிடத்தான் வேண்டும் என்று அவர் கூறுவது நியாயம் நியாயம்!" என்று மனச்சாட்சியை கழட்டி வெளியே வைத்துவிட்டு தைரியமாக எழுதவில்லையா? சாதி பேதம் கூடாது என்று திராவிடக் கழகம் கூறும்போது அதைச் சாடிய பல பார்ப்பன ஏடுகள் அன்பர் வ. ரா அதையே கூறியவுடனே "அடாடா என்ன அற்புதமான கருத்து!" என்று பதிகம் பாடவில்லையா, நாயும் பன்றியும் நுழையும் கோயிலில் நம் அருமைத் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் ஏன் நுழையக் கூடாது என்று சுயமரியாதை இயக்கம் வீரமுழக்கம் புரிந்தபோது "நாஸ்திகம் நாஸ்திகம்!" என்று கூச்சல் பாணம் தொடுத்தவர்கள், பிறகு ஓர் நாள் வைத்தியநாதய்யர் மதுரைக் கோயிலைத் திறந்தபோது, "நம்ம அய்யர்வாள் லோகானுபவம் தெரிந்தவர்! நல்ல சீர்திருத்த வாதின்னா அவா" என்று அட்டைப்படம் போட்டு உள்ளே படவிளக்கம் எழுதவில்லையா? ஆனால் நாம் அதுபோல வகுப்புத்துவேஷ மனப்போக்குடன் பணியாற்றியதாக ஒரு சிறு ஆதாரமாவது உண்டா? எப்போதுமே, திராவிடர் கழகம், சாதி பேதமற்ற, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளற்ற, சுரண்டல் சூது அற்ற, சமுதாய அமைப்பு வேண்டும் என்ற தன் இலட்சிய கீதத்தை உரைகல்லாகக் கொண்டுதான் எந்தப் பிரச்சினையையும் உரைத்துப் பார்க்கிறதே தவிர சொன்னவர் யார், பார்ப்பனராயின் அவர் சொன்னது தீயதென்று கூறு, திராவிடராயின், நன்றென்று கூறு என்ற நச்சு மனப்பான்மையை உரைகல்லாகக் கொண்டல்ல!

நம்முடைய இந்த சமுதாய சீர்திருத்தப் பணிக்கு ஹிந்து,

சுதந்த்ரா போன்ற படித்த, பக்குவ மனம் படைத்த, மேல் நாட்டுக் கலை அறிவு நிரம்பிய, பார்ப்பன எழுத்தாளர்களால் நடத்தப்படும் ஏடுகள் நியாயமாக ஆதரவளித்திருக்கவேண்டும்! பாமரர்களிடமிருந்து நமக்கு, நம் புரட்சிப் பணிக்கு, நம்முடைய பகுத்தறிவுப் பிரசாரத்திற்கு ஆபத்து ஏற்பட்ட வேளையில் இவர்கள் நமக்கு உற்ற துணைவர்களாகவும் தோழர்களாகவும் இருந்து நமக்குக் கைகொடுத்து உதவியிருக்கவேண்டும். இந்த ஏடுகளும் இவற்றை நடத்தும் ஆசிரியர்களும் உண்மையாகவே நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்களாக இருந்திருந்தால் இதைத்தான் செய்திருப்பர், ஆனால் இவர்கள் செய்ததோ வேறு! நம்மை எதிர்த்தனர், எதிர்த்தனர் என்றால் சாமானியமான முறையில் அல்ல, நம்மை, தங்களுடைய பரம்பரைப் பகைவர்களாகக் கருதிக்கொண்டு எதிர்த்தனர்.

நம்மை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ள இவர்கள், ஆதரிக்க விருப்பமில்லாவிட்டால், சும்மாவாவது இருந்திருக்க வேண்டும், ஆனால் இவர்களோ, சும்மாவும் இருக்கவில்லை, நம் மீது அனல் கட்டிகளை அள்ளி வீசினர்! படித்த இவர்கள் பாமரர்களுடன் சேர்ந்துகொண்டு நம் மீது துவேஷ அந்தாதி பாடினர்! எந்த மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ அதே மக்களின் வெறுப்பு நம் மீது பாயும் விதத்திலே "புனிதமான" பணியைப் புரிந்து வரலாயினர்! ஆனால் நம்முடைய இயக்கம் இவர்களுடைய இந்த துவேஷப் பிரசாரத்தையும் எதிர்ப்புப் புயலையும் சிறிதும் பொருட்படுத்தாமல் வேகமாக வளரலாயிற்று. வளர்ந்துவளர்ந்து இன்று, அவர்கள் உள்ளத்தில் 'அக்கினி'யை மூட்டும் அளவுக்கு நம் இயக்கம் வானுற ஓங்கி வளம் பெற நிற்கிறது. இதைக் கண்டு அச்சம் மிகக் கொண்டு, அந்தப் "பரப் பிரம்மங்கள்", "நம் எதிர்ப்பும் இவர்களைச் சாய்க்கவில்லை, நம் துவேஷப் பிரசாரமும் இவர்களை ஒழிக்கவில்லை, எனவே இனி இவர்களின் எழுத்தையும் பேச்சையும் கட்டுப்பாடாகத் திரித்துக் கூறி, சட்டப்படி இவர்கள் பெருங்குற்றம் செய்கிறார்கள் என்ற கற்பனை நிலையை நம் பிரசார பலத்தால் சிருஷ்டித்து, அதன் மூலம் இவர்களை ஒழித்துக்கட்டவேண்டும்" என்ற முடிவுக்கு வந்து அதையே முடிந்த முடிவாகக் கொண்டு, அந்த முடிவை நிலைநாட்டுவதில் இப்போது முழுமூச்சாக ஈடுபட்டும் விட்டார்கள். இந்த வகுப்புத்துவேஷ அனல் கக்கும் திருப்பணியை சென்ற ஓராண்டு காலமாக ஆரிய வட்டாரத்திலிருந்து புறப்பட்டுள்ள இரண்டொரு மட்டரக ஏடுகள் தம் மனம் போன மட்டும் செய்து வந்தன. அவை மட்டரக ஏடுகள், ஆகவே அப்படிச் செய்வது இயற்கை, எனவே அது கண்டு நாம் துளியும் வியப்போ திகைப்போ அடையவில்லை. அவற்றை கால் தூசுக்கும் சமமாக நாம் மதிக்கவில்லை, ஏன் இந்த மட்டரகங்கட்கு விடை எழுதவில்லை என்று இரண்டொரு நண்பர்கள் நம்மைக் கேட்டுவந்தபோதும், அவற்றை மதித்து விடை எழுதுவது நம் பேனாவின் மதிப்பிற்கே இழுக்குத் தருவது என்று நாம் விடை கூறிவந்தோம், ஆனால் இப்போது நாம் இதுவரை கண்ணியமான ஏடுகள் என்று கருதி வந்த "ஹிந்து"வும் "சுதந்த்ரா"வும் கூட அந்த மட்டரக ஏடுகளின் தரம் எவ்வளவு கீழே இருக்கிறதோ அவ்வளவு கீழான தரத்திற்கு இறங்கியிருப்பதைக் காண்கிறோம், உண்மையில் ஆச்சரியப்படுகிறோம், "உங்களுக்குமா இந்தக் கதி! ஐயோ பாவம்!" என்று இரக்கப்படவும் விழைகிறோம்.

"ஹிந்து" 24-2-49 அன்று நம் கழகப் பிரசாரத்தைப்பற்றி எழுதும்போது, நம் பிரசாரம் **ஆபாசமானது, தாரதம்மியமற்றது, மட்டரகமானது, இழிவானது, யூதர்கள்மீது ஹிட்லர் பாய்ந்து பிடுங்கியதைப் போன்ற வெறித்தன்மை மிக்கது** என்ற இந்த ஐந்து குற்றச்சாட்டுகளை வீசியிருக்கிறது! "சுதந்த்ரா" 19-2-49 இதழில், திராவிடர் கழகத்தை, "**பிராமணர்களுடைய இரத்தத்தைக் குடிப்பதற்காக இரத்தவெறி கொண்டு அலையும் பரபரப்பான வகுப்புவாத இயக்கம்**" என்று எழுதியிருக்கிறது. தன் குற்றச் சாட்டுகளை வீசிவிட்டு, "ஹிந்து,' அந்தப் பயங்கரமான தலையங்கத்தின் இறுதியில், ஆட்சியாளர்கள் ஏன் இவர்கள்மீது இன்னும் தக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றனர் என்று கோபாவேசத்துடன் கேட்டிருக்கிறது.

பிராமணர்கள்மீது பொது மக்களின் ஆத்திரம் தாக்காவண்ணம், மக்களை சாந்தப்படுத்திவரும் நற்பணி புரிந்து வரும் கழகத்தின்மீது இத்தகைய முழுப் பொய்யும் புரட்டுமான பழிகளை வீசி[illegible] ஒழிய தாங்கள் செய்துவரும் அக்கிரமங்களை இனி காங்கிரஸ் திராவிடர்களின் கண்ணிலிருந்துகூட மறைக்கமுடியாது என்பதை நன்குணர்ந்த காரணத்தாலேயே இத்தனை ஆண்டுகளாக ஓரளவு கண்ணியமாக எழுதிவந்த (கருத்திலே எப்போதுமே கண்ணியம் இருந்ததில்லை!) இந்த இரண்டு ஏடுகளும் கூட இப்போது தம் வட்டாரத்தில் உள்ள ஏனைய சில ஏடுகளைப்போல் இவ்வளவு கீழ்த்தரமான மொழி நடையையும் திமிர்வாதத்தையும் கையாளத் தொடங்கிவிட்டன. குறிப்பாக "ஹிந்து" ஏட்டைப் பொறுத்தவரை, எவ்வளவுதான் உள்ளத்தை உலுக்கும் சம்பவம் நிகழ்ந்தாலும் கோபாவேசத்தோடு அது எழுதாது என்பதுமட்டுமல்ல, சற்று காரசாரமாக எழுதும் வழக்கம்கூட அதனிடம் கிடையாது. உத்தமர் காந்தியாரை வெள்ளை ஆட்சி கைது செய்த காலத்தில் கூட அது விறுவிறுப்பான நடையில்கூட தலையங்கம் எழுத மறுத்துவிட்டது. சர்வசாதாரணமான உப்புசப்பற்ற தலையங்கம்தான் எழுதிற்று. ஏனெனில் எத்தகைய மகத்தான சம்பவங்கள் உலகில் நிகழ்ந்தாலும் தன் நிதானபுத்தியை இழக்காத மிகப் பெரிய "ஞானயோகி"யாம் அந்த ஏடு! ஆனால் அதே ஏடு இப்போது, வளர்ந்து வரும் திராவிடர் கழகப் பிரசாரத்தைக்கண்டு, விஷத்தைக் கக்கும் விபரீத நடையில் இதுபோல எழுதுகிறது என்றால் அதன் உள்ளம் நம் புரட்சிப் பிரசாரத்தைக்கண்டு எவ்வளவு நடுங்குகிறது என்பதற்கு இதைவிடசான்று வேறென்ன வேண்டும்? ஆனால் ஒன்று! இந்த ஏடுகளின் கூற்று எவ்வளவு அபாண்டமான வீண்பழி என்பதை நாம் விளக்கிக்கொண்டிருப்பது வீண் வேலை, நாடு, நம் கழகத்தின் உன்னதமான இலட்சியத்தை நன்கறியும். இல்லையானால் அதே "சுதந்த்ரா," அதே இதழில், ஏன், அதே பக்கத்தில், இன்னும் சொல்லப்போனால், பிராமணர்களுடைய இரத்தத்தைக் குடிப்பதற்காக இரத்தவெறி கொண்டலையும் பர

ரப்பான வகுப்புவாத இயக்கம் என்று நம்மைத் தூற்றிய வரிக்கு அடுத்த வரியிலேயே, "இந்த இயக்கம் ஏராளமான மக்கள் கூட்டத்தவரின் உள்ளங்களை சந்தேகமறக் கைப்பற்றி இருக்கிறது என்பது உண்மை. அதனுடைய செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது. கருஞ்சட்டையினரின் இலட்சியங்களை ஒப்புக்கொண்டு வகுப்புவாத மனப்பான்மை படைத்தவர்களாக மாறிவிட்ட காங்கிரஸ் தலைவர்கள் கொஞ்ச நஞ்சமல்ல" என்று எழுதியிருக்குமா?

"சுதந்திரா" எழுதியிருப்பதைப் போல நம் இயக்கத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது. இந்த வளர்ச்சியும், காங்கிரஸ் வட்டாரத்திலேயும் நம் கொள்கைகட்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கும், சுதந்திராக்களையும் ஹிந்து முதலிய ஏடுகளையும் திகைத்துத் தேம்பி அலறித் துடித்து அழுது அரற்றும்படி செய்துவிட்டிருக்கிறது. ஆகவேதான் ஜன்னி கண்டவன் தான் உளறுவது இன்னது என்பதையே அறியாமல் கண்டதைப் பிதற்றுவது போல இவர்களும் வார்த்தைகளின் முழுப்பொருளையும் விளைவையும் அறியாமல் மனம்போன போக்கில் மிகத் தாழ்வான அருவறுக்கத்தக்க நடையில் எழுத்துக்களை வீசியிருக்கின்றனர்!

எழுத்துக்களையா வீசியிருக்கின்றனர்! அல்ல! தவறு! விஷ விதைகளை வீசியிருக்கின்றனர்! விஷ விதைகளை வீசினால் விளைவு விபரீதமாகும் என்பதை சாதாரணப் பொது அறிவு படைத்த எவனும் அறிவான். ஆனால் அகில உலக அரசியலும் அறிந்ததாகப் பெருமையடித்துக் கொள்ளும் இந்தப் பெரிய மனிதர்களின் ஏடுகள் இந்தச் சாதாரண சங்கதியையும் புரிந்துகொள்ளாமல் இந்த விபரீத காரியம் புரிந்திருக்கின்றனர். அவர்களுடைய அருமருந்தன்ன சமஸ்கிருதத்திலேயே ஓர் அற்புதமான பழமொழி இருக்கிறது அவர்களுடைய இப்போதைய மனநிலையையும் அறிவு நிலையையும் அழகுற விளக்க:— **"விநாச காலே விபரீத புத்தி:"** அவர்களுடைய அம்மொழியை அவர்களுக்கே நினைப்பூட்டுகிறோம், அவர்கள் தம் நிதான புத்தியை இழந்திருக்கும் இந்த (அவர்களுக்கு) ஆபத்தான விநாடியில்!

* * *

இதுவரை நிதானத்தை இழக்காமல் இருந்த தம் பேனா முனைகள் மூலமாக இப்போது விஷத்தைப் பொழியத்தொடங்கிவிட்டன சில விரியன் பாம்புகள்! இந்த விஷம் தமிழர்களைத் தீண்டாது. ஏனெனில் அவர்கள் இந்த விஷ சக்தியின் எதிர் சக்தியான சுயமரியாதை சூரணத்தை பலகாலமாக அருந்தி வருகின்றனர். அந்த சூரணம் அருந்தி அருந்தி தமிழர்களுடைய உடல் எத்தகைய விரியன் பாம்புகளின் விஷத்தையும் தாங்கும் அற்புதமான சக்தியை அடைந்திருக்கிறது. ஆகவே இப்போது விரியன் பாம்புகள் விஷத்தைப் பொழிவதால், ஆபத்து, தமிழருக்கில்லை, அந்த விரியன் பாம்புகளுக்குத்தான் உண்டு! அவற்றை இனி தமிழர்கள் சும்மா விட்டு வைக்க மாட்டார்கள்!

* * *

பேனா எவ்வளவு அருமையான ஆயுதம்! வால்டேர்களிடமும் ரூசோக்களிடமும் கார்ல் மார்க்ஸ்களிடமும் பெரியார் இராமசாமிகளிடமும் தங்கியபோது அது எவ்வளவு அற்புதமான மனப்புரட்சிகளையும் சமுதாயப் புரட்சிகளையும் உண்டுபண்ணியிருக்கிறது! அதே பேனா இதோ இந்த ஏடுகளிடம் சிக்கிக்கொண்டு எவ்வளவு தாழ்ந்த செயல் புரியப் பயன்படுகிறது! பேனா — புரட்சியின் வளர்ச்சிக்கான அரிய போர்க்கருவி — அவர்களுக்கு! ஆனால் விஷத்தைப் பொழிவதற்குப் பயன்படும் நச்சுப் பல் இங்குள்ள விரியன் பாம்புகளுக்கு! பேனா ஒன்று! ஆனால் அதை ஏந்துவோரின் உள்ளப் பண்புக்கேற்ப அது பெறும் வடிவம் ஆயிரம் ஆயிரம்! பேனா ஒரு மாயாவி என்று நாம் தொடக்கத்தில் குறிப்பிட்டோமே, தவறா அது?

—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், கல் உள்ளம் அற்றவர்கள், இந்துமதத் துவேஷிகள், பாபாத்மாக்கள், புனித பாரதத்தின் பெயரைக் கெடுக்கவந்த பாபிகள் துஷ்டர்கள் என்றெல்லாம் தூற்றுகிறார்களே தெரியுமா? "தூற்றினால் எமக்கென்ன? இந்தத் தூர்வாசர்கள் தூற்றல் கணைகளை விடுப்பதாலே பகுத்தறிவுப் பாதையில் வேகமாக உருண்டுகொண்டிருக்கும் இந்தப் பெரிய உலகம் சடக்கெனத் திரும்பி பின் வழியாகவா வாபீஸ் ஆகிவிடப்போகிறது?" என்றுகேட்கிறீர்களா! ரொம்பச் சரி! கேளுங்கள் கேளுங்கள் நன்றாகக் கேளுங்கள்! ஆனால் கொஞ்சம் மெதுவாகக் கேளுங்கள்! அந்தப் பத்தாம் பசலிகளின் காதில் விழுந்துவிடப் போகிறது! விழுந்தால் அவர்கள் முகம் மூன்றும் பேஸ்தாகிவிடும். பிறகு நமக்கு அவர்களைப் பார்க்கவே சகிக்காது! ஐயோ பாவம்! "பாவமென்ன பாவம்! குளத்தங்கரை ஓரங்களில் பஞ்சாங்கக் கட்டை விரித்து வைத்துக்கொண்டு ஆருடம் கூறியோ கைரேகை பார்த்துக்கொண்டே பிழைக்க வேண்டியதுகள் சட்டமன்றம் ஏறி புது உலகை சவாலுக்கும் அழைப்பதானால் அதை நாங்கள் பொறுத்துக்கொண்டா இருக்கமுடியும்? சாட்டையடி தந்தேதீருவோம் அந்த ஜாம்பவான்களுக்கு" என்கிறீர்களா? அது உங்கள் விருப்பம்! நான் எப்படித் தடுக்கமுடியும்? ஆனால் ஒன்று! பழமைக் குட்டையில் ஊறிய மட்டைகளை பகுத்தறிவுச் சாட்டையால் அடிப்பதால் சாட்டைதான் கிழியுமே தவிர அந்த மட்டைகள் சிறிதும் மாற மாட்டா! ஏனெனில், பழமை, பன்னெடுங் காலமாக, அந்த மட்டைகளில் ஊறி, ஊறி, அந்த மட்டையின் ஒவ்வோர் அணுவும் பாசி படிந்த அழுக்கு உருண்டையாக மாறிவிட்டது. அதைத் தடுப்பது நம்மால் ஆகும் காரியமா? மக்களைத்தான் நாம் மாற்ற முடியும்! மக்களாக வாழ மறுப்பவர்களைக் கூடவா நாம் மாற்றமுடியும்?

—

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)